**வணக்கத்துக்குரிய மாதுலுவாவே சோபித்த தேரரின் மறைவு தொடர்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.**

நவம்பர் 09, 2015, கொழும்பு, இலங்கை: மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) வணக்கத்துக்குரிய மாதுலுவாவே சோபித்த தேரரின் மறைவு தொடர்பாக கவலையைத் தெரிவித்துக் கொள்கிறது.

வணக்கத்துக்குரிய மாதுலுவாவே சோபித்த தேரர் ஜனநாயகத்திற்கு விரோதமான சர்வாதிகாரத்தை தோற்கடிப்பதற்கான போராட்டத்தின் முன்னிலையான சிவில் சமூக செயற்பாட்டாளராகத் திகழ்ந்தார். அவரின் செயற்பாட்டு ரீதியான தலைமைத்துவம் காரணமாக அவரின் சமூக நீதிக்கான மக்கள் இயக்கம் ஊழல் மோசடிகள் மற்றும் சர்வாதிகாரத்திற்கு எதிரான பயணத்தை பலப்படுத்துவதற்காக உதவியது. இந்நிலையில், இவ்வாறான சிவில் சமூகத் தலைவருக்கு மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் தனது மரியாதையை தெரிவித்துக்கொள்கின்றது. விசேடமாக மறுசீரமைப்பு செயற்பாடுகளின் தீர்மானம் மிக்க நேரத்தில் அவரின் தொடர்ச்சியான, விவாதபூர்வமான, மனதை நேரடியாகத் தாக்கும் வகையிலான கருத்துக்களை பெற்றுக்கொள்ள முடியாது போனமை மிகவும் வேதனையான விடயமாக காணப்படுகின்றது.

மத குருமார்கள் மற்றும் சிவில் சமூகத்தில் கௌரவம் மிக்க உறுப்பினரான சோபித்த தேரர் மாற்றத்தின் தேவை தொடர்பாக கருத்துக்களை வெளியிட்டதோடு அண்மைக்காலத்தில் அந்த மாற்றத்தை அடைவதற்கான தாமதம் குறித்தும் அதன் பண்புரீதியான விளைவு குறித்தும் தன்னுடைய கவலையை தெரிவித்திருந்தார். மற்றையவர்களிலும் பார்க்க நிலைமைகளை நன்றாக புரிந்துக்கொண்டிருந்த அவர், செயற்பாட்டு ஜனநாயகத்திற்குள் சிவில் சமூகத்தின் பிரதான பொறுப்பாக ஆட்சி மற்றும் மக்கள் தொடர்பு செயற்பாடுகளின் போது தொடர் பங்குதாரர்களாக - செயற்பாட்டாளர்களாக மாறுவதினூடாக நிலையான பாதுகாப்பற்றவராக மாறவேண்டி வருமென அவர் எவ்வித சந்தேகமும் இன்றி தெரிவித்திருந்தார்.

அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.